வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**SC.No. 102 / 2024**

வழக்கு சாட்சி **PW 3**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : கிருஷ்ணன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : சுப்பாநாயக்கர் | கணவர் பெயர் | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுகா | : | வயது | : |
| மாவட்டம் | : | நாள் | : 07.04.2025 |

முதல் விசாரணை:

நான் தற்போது சூரப்பநாயக்கன்பட்டியில் வசித்து வருகிறேன். நான் வனத்துறையில் வனக்காப்பாளராக பணிபுரிந்து வந்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. எனக்கு பக்கத்து தோட்டம் என்பதால் என்னை இந்த வழக்கில் சேர்த்துவிட்டார்கள். இந்த வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக்க அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் சாட்சியை பிழற் சாட்சியாக அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)

கடந்த 09.11.2016ம் தேதி பிற்பகல் 06.00 மணிக்கு ஒட்டன்சத்திரம் தாலுகா, காப்பிலியபட்டி, ராயக்கவுண்டன் புதூரில் உள்ள எதிரி தோட்டத்தில் சுமார் 5 லிட்டர் கொள்ளவு கொண்ட பிளாஸ்டிக் கேனில் கள்ளச்சாராயம் தயார் செய்து விற்பனைக்காக வைத்திருந்ததாகவும் மேலும் 40 லிட்டர் கொள்ளவு உள்ள மண்பானையில் 25 லிட்டர் அளவு கள்ளச்சாராயம் தயார் செய்ய சாராய ஊரலை தயார் செய்து வைத்திருந்ததாகவும் எதிரி தியாகராஜன் வைத்திருந்தை மதுவிலக்கு போலீசார் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் என்முன்னிலையில் சாராயத்தையும் ஊரலையும் கைப்பற்றி அழித்தசம்பவத்தை நேரில் பார்த்தும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரி எனது பக்கத்து தோட்டத்துகாரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.04.09 09:57:24 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**SC.No. 102 / 2024**

வழக்கு சாட்சி **PW 2**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜா | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : பரமசிவம் | கணவர் பெயர் | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுகா | : | வயது | : |
| மாவட்டம் | : | நாள் | : 07.04.2025 |

முதல் விசாரணை:

நான் தற்போது தங்கச்சியம்மாபட்டியில் வசித்து வருகிறேன். கிராம நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 09.11.2016-ம் தேதி சுமார் மாலை 05.00 மணிக்கு கிராம நிர்வாக அலுவலருக்கு ஒரு போன் கால் வந்தது. அப்போது என்னிடம் கிராம நிர்வாக அலுவலர் பழனிச்சாமி தோட்டம் எங்குள்ளது என்று கேட்டார். நான் ராயப்பன்புதுாருக்கு வடபுறம் இருப்பதாக சொன்னார். உடனடியாக அந்த இடத்திற்கு போகவேண்டும் என்று சொன்னார். நான் கிராம நிர்வாக அலுவலரை அந்த இடத்திற்கு அழைத்து சென்று காட்டினேன். அங்கு போனபின்பு தான் கள்ளச்சாராயம் காய்ச்சுவதாக தகவல் வந்தது. உள்ளே சென்று போலீசார், வி.ஏ.ஓ மற்றும் நான் ஆகியோர்கள் சென்று தேடிப்பார்த்தோம். அங்கு வெள்ளைக்கேனில் 5 லிட்டர் சாராயம் இருந்தது. அதை எடுத்துவிட்டு மீண்டும் தேடும்போது அந்தசாலைக்கு முன்புறமாக சுமார் 25 முதல் 30 லிட்டர் ஊரல் இருந்தது. அதை தோண்டி எடுத்து எங்கள் முன்னிலையில் வைத்து சாராயம் மற்றும் ஊரலை அழைத்தாக்ள். பின்னர் கையெழுத்து கேட்டார்கள் நான் போட்டுவிட்டேன். என்னிடம் காட்டபப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அது அ.சா.ஆ.3. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.4. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

போலீசார் எந்த தேதியில் எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் ராயக்கவுண்டன் புதுரில் மாலை 05.00 மணிக்கு என்னை விசாரித்தார்கள். அப்போது போலீசார் என்னை விசாரணை செய்த போது வி.ஏ.ஓ விற்கு போன் கால் வந்தது என்றும் அப்போது அவர் பழனிச்சாமி தோட்டம் எங்குள்ளது என்று கேட்டார் என்ற விபரத்தை நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். பழனிச்சாமி தோட்டன் ராயக்கவுண்டன் புதுாருக்கு வடக்கில் உள்ளதாக வி.ஏ.ஓ விடம் சொன்னதை நான் முதல் விசாரணையில்

சொல்லியுள்ள சங்கதியை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் தான் கிராம நிர்வாக அலுவலரை அழைத்து சென்று அந்த இடத்தை காட்டியதாக முதல் விசாரணையில் நான் சொல்லியுள்ளதை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நான் மற்றும் போலீசார் சகிதம் கள்ளசாராயம் மற்றும் ஊரலை தேடியதாகவும் அதை எடுத்து அழித்ததாகவும் நீதிமன்ற முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதியை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை பக்கங்கள் கொண்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்களில் என்ன விபரம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலங்களில் என்ன விபரம் கண்டுள்ளது என்பது எனக்கு தெரியாததற்கு காரணம் என்ன என்றால் நான் பழனி மதுவிலக்கு காவல்ல நிலையதிதில் வைத்து வெற்றுப்பேப்பரில் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றால் சரியல்ல. ஆனால் ஒட்டன்சத்திரம் சத்திரம் காவல் நிலையத்தில் வைத்து எழுதிய பேப்பரில் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை போல் எந்த சம்பவம் அங்கு நடைபெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரிதான்.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.04.09 09:57:33 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்

வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**SC.No. 102 / 2024**

வழக்கு சாட்சி **PW 1**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வினோத்குமார் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : கருப்புச்சாமி | கணவர் பெயர் | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலுகா | : | வயது | : |
| மாவட்டம் | : | நாள் | : 07.04.2025 |

முதல் விசாரணை:

நான் தற்போது வீரலப்பட்டியில் வசித்து வருகிறேன். கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 09.11.2016ம் தேதி நான் காப்பிலியப்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக நான் பணிபுரிந்த போது பழனி மதுவிலக்கு காவல்துறையினர் காப்பிலியபட்டி கிராமத்தை சேர்ந்த பழனிச்சாமி மகன் தியாகராஜ் என்பவர் கள்ளச்சாராயம் காய்ச்சுவதாக கிடைத்த தகவலின் பேரில் பழனி மதுவிலக்கு போலீசார் என்னை அழைத்தனர். நானும் கிராம நிர்வாக உதவியாளர் ராஜா அவர்களும் தியாகராஜ் அவர்களது தோட்டத்து சாளைக்கு சென்றோம். அங்கு தியாகராஜ் என்பவரை விசாரணை செய்த போது அவர் ஏற்கனவே காய்ச்சி வைத்திருந்த கள்ளச்சாராயம் சுமார் 5 லிட்டர் கைப்பற்றியும் சாராய ஊரல் சுமார் 25 லிட்டர் கைப்பற்றியும் அவரிடம் விசாரணை செய்ததில் அவர் தான் கள்ளச்சாராயம் காய்ச்சியதாக ஒப்புக்கொண்டார். அவர் தான் காய்ச்சியதாக காவல் ஆய்வாளர் விசாரித்தபோது ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது உதவியாளரும் கையெழுத்து செய்தோம். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1. பழனி மதுவிலக்க போலீசார் அவர்க கைப்பற்றிய சுமார் 25 லிட்டர் சாராய ஊரலை அங்கேயே அழித்துவிட்டார். அவர் ஏற்கனவே காய்த்து வைத்திருந்த 5 லிட்டர் சாராயத்தை பழனி மதுவிலக்கு காவல் ஆய்வாளர் என் முன்னிலையிலும் எனது உதவியாளர் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ,2. அதில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை:

என்னை பழனி மதுவிலக்கு போலீசார் எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார் என்றால் 09.11.2016ம் தேதி மாலை 05.00 மணியளவில் தியாகராஜ் தோட்டத்து சாளையில்

வைத்து விசாரித்தார். அவ்வாறு என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தில் எத்தனை மணிக்கு என்னை அழைத்து நான் அங்கு சென்றேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை விசாரணை செய்து பதிவு செய்த வாக்குமூலத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சுவதாக தகவல் கிடைத்தது என்ற விபரத்தை நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது நான் புலியூர் நத்தம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆனால் நான் வசித்து வருவது வீரலப்பட்டி கிராமம் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் என்பவர் அவர் பணிபுரியும் கிராமத்தில் தான் குடியிருக்க வேண்டும் என்பது விதி என்றால் சரிதான். அந்த அரசு விதியை நான் கடைபிடிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் எனது சாட்சியம் நம்பத்தகுந்த சாட்சியம் இல்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கு குறித்து தனிப்பட்ட புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலீசாரும் எந்த புகாரும் கொடுக்க சொல்லி என்னை அறிவுறுத்தவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சம்பவங்கள் அனைத்தும் மாலை 05.00 முதல் 07.00 மணி வரை நடைபெற்றது. நான் கையெழுத்து செய்துள்ள ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி எத்தனை பக்கங்கள் கொண்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் எதுவும் எழுதப்படாத வெள்ளைத் தாளில் பழனி மதுவிலக்கு காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்து கொடுத்ததால் தான் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி எத்தனை பக்கங்கள் கொண்டது என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் என்ன விபரம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். நான் காப்பிலியபட்டி கிராமத்தில் கூடுதல் பொறுப்பாக தான் கவனித்து வந்தேன் என்றால் சரிதான். அப்போது கூடுதல் பொறுப்பாக நான் 2 ஆண்டு காலம் காப்பிலியபட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். அப்படி கவனித்து வந்த சமயத்தில் கள்ளச்சாராயம் காய்ச்சிவருவதாக புகார் என்னிடம் யாரும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்தின் அருகாமையில் குடியிருப்பு வீடுகள் உள்ளது என்றால் சரிதான். யார் யார் வீடுகள் அருகாமையில் உள்ளது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால ் சரிதான். தெருக்கள் அதிகமாக உள்ளது என்பதால் தான் என்னால் சொல்லமுடியாது. என்ன என்ன பெயர்களில் தெருக்கள் சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்திற்கு அருகாமையில் உள்ளது என்று என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்தில் என்ன என்ன கட்டிடங்கள் என்ன திசையை நோக்கி இருந்தது என்றும் கிணறு இருந்ததா இல்லையா என்று என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்திற்கு நான் செல்லவில்லை என்றும்

அதனால் தான் என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு வேண்டாதவர்களின் தூண்டுதலின் பேரில் பழனி மதுவிலக்கு போலீசார் அலுவலகத்திற்கு வரவழைத்து அங்கு அமர வைத்திருந்தார்கள் என்றும் அங்கு என்னை வரச் சொல்லி எதுவும் எழுதப்படாத வெள்ளைத்தாளில் கையெழுத்து மட்டும் பெற்றுக் கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போன்று வழக்கு சம்பவம் அங்கு நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கோ இந்த வழக்கு சம்பவத்திற்கோ எதிரிக்கோ எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

M DHANABAL

Digitally signed by M DHANABAL
Date: 2025.04.09 09:57:44 +0530

சார்பு நீதிபதி

ஓட்டன்சத்திரம்